ஓம் நமச்சிவாய



அருள்மிகு ஆதிபுரீஸ்வரர்

# அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்

திருவொற்றியூர், சென்னை-600 019.

## அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் சுவாமிக்கு

## புனுகு சாம்பிராணி தைலாபிஷேக கார்த்திகை தீப உற்சவபத்திரிக்கை

சமயமேலாறு மாகித் தானொரு சுயம்பு வாகி
இமையவர் பரவியேத்த வினிதினங் கிருத்த வீசன்
சுமையினை யுடையராகிக் கழலடி பரவுவார்க்கு
உமை யொருபாகர் போலு மோற்றியூருடைய கோவே

சிவநேயச் செல்வர்களே!

இத்தொண்டை மண்டலம் சிவதலங்கள் 32-ல் ஒன்றாகியதும், சுந்தரர் சங்கலியாரை திருமணம் செய்து கொண்டதும் கலிநாயனார் திருவிளக்கிட்டு முக்தி அடைந்ததுமான ஔதும்பர க்ஷேத்திரமென்னும் திருவொற்றியூரின கண் வீற்றிருக்கும **அருள்மிகு வடிவுடையம்மன் உடனுறை அருள்மிகு தியாகராஜ பெருமான் ஆலயத்தில்** நிகழும் ஸ்ரீ துர்முகி வருடம் கார்த்திகை மாதம் 28-ம் தேதி 13-12-2016 பௌர்ணமி செவ்வாய்கிழமை மாலை **அருள்மிகு ஆதிபுரீஸ்வரருக்கு கவசம் திறந்து புனுகு சாம்பிராணி தைலாபிஷேகமும், மஹா அபிஷேகமும்,** இரவு அருள்மிகு தியாகராஜ பெருமான் மாடவீதி உற்சவம் நடக்கிறபடியால் பக்தகோடிகள் மேற்படி விழாவில் கலந்து கொண்டு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

திருக்கோயிலுக்கு நன்கொடையோ, காணிக்கையோ, செலுத்த விரும்புவோர் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவும், காசோலை அல்லது வரைவோலை செலுத்த விரும்புவோர் உதவி ஆணையர், செயல் அலுவலர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**K. சித்ராதேவி** B.A., B.L
தக்கார் / செயல் அலுவலர் (கூ.பொ.)

**இரா.வான்மதி** M.L.
துணை ஆணையர் / உதவி ஆணையர் / செயல் அலுவலர் (கூ.பொ)

## உற்சவ உபயதாரர் : திரு. எம்.எம்.சாரிடிஸ்

அபிஷியல் டிரஸ்டி அலுவலகம், ஹைகோர்ட் பில்டிங், சென்னை-600 104.

**குறிப்பு : ஆண்டுக்கு ஒருமுறை மூன்று தினங்களில் மட்டுமே கவசமின்றி சுவாமியை பூரணமாக தரிசிக்கலாம்.**

| | | |
|---|---|---|
| கவசம் திறப்பது | : | 13-12-2016 செவ்வாய்கிழமை மாலை முதல் |
| கவசம் மூடுவது | : | 15-12-2016 வியாழக்கிழமை இரவு வரை |
| மின்னஞ்சல் முகவரி | : | vadivudaiammantemple@gmail.com |
| இணையதள முகவரி | : | www.vadivudaiamman.org |